DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF DISTRICT MUNCIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM**

| | | |
|---|---|---|
| Case No. | : | **CC No. 34/2025** |
| Deposition of witness | : | **PW-9** |
| Name | : | சரவணபவகுமார் |
| Father's /Husband Name | : | ராஜன் |
| Village | : | பேரளம் |
| Taluk | : | பேரளம் |
| Age | : | 56 |
| Occupation | : | காவல் உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17th day March 2026.
Accused present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது பேரளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.07.2023ம் தேதி பயிற்சி உதவியாளர் ராஜா என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது, திருவாரூர் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளிக்கு சிகிச்சையிலிருந்த அ.சா.1டம் வாக்குமூலம் பெற்று வந்து பேரளம் காவல் நிலைய குற்ற எண். 392/2023, சட்டப்பிரிவுகள் 294(b), 323, 506(1) இதச-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதன் நகலை எனது விசாரணைக்காக வைத்தார். நான் அந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 30.07.2023ம் தேதி மதியம் 03.45 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் விஜி மற்றும் பாபு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.7** மற்றும் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு

காயம்பட்ட புகார்தாரரான பார்வதி என்பவரையும், கண்ணுற்ற சாட்சிகளான அஞ்சம்மாள், மங்கையர்க்கரசி, விஜயா ஆகியோர்களை விசாரித்தேன். சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியான வீரையன் என்பவரை விசாரித்தும், பார்வை மகஜர் சாட்சிகளான பாபு மற்றும் விஜி ஆகியோர்களை விசாரித்தும் தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு அ.சா.1–க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் அருண்பிரகாஷ் என்பவரை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்றேன். அந்த காயச்சான்றின் அடிப்படையில் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என தெரிய வந்ததால், வழக்கின் சட்டபிரிவினை 294(b), 323, 506(1) இதச–விலிருந்து 294(b), 325, 506(1) இதச–ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு எனது விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரியை கடந்த 30.07.2023 ம் தேதி மதியம் 03.00 மணியளவில் கொல்லுமாங்குடி கடைத்தெருவில் வைத்து அடையாளம் கண்டு பின்பு காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன். பிறகு இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

வரைபடத்தில் சுதாகர் வீடு என்று காண்பிக்கப்பட்டுள்ள வீடானது சார்பு கொட்டகையுடன் கூடிய வீடு என்றால் சரிதான். அந்த சார்பு கொட்டகையில்தான் அ.சா.1 மற்றும் அவரது கணவர் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். அ.சா.1 எதிரியிடம் ரூ.10,000/– கேட்டதாக சொல்லப்படும் தொகை தொடர்பாக விசாரித்ததில், எதற்காக அ.சா.1 அந்த

பணத்தை கேட்டார் என்றோ, அதற்கு ஆவணங்கள் உள்ளதாகவோ கூறி, என்னிடம் பணம் கேட்டகப்பட்ட காரணத்தை கூறி ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் விபத்து பதிவான தேதி திருத்தம் காணப்படுவதற்கு மருத்துவரிடம் விசாரித்தேனா என்றால் அது குறித்து விசாரிக்கவில்லை. சம்பவ சமயமானது மழைக்காலம் என்றால் சரிதான். இவ்வழக்கில் X ray பதிவுகளை கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1ன் காயத்திற்கும், இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கை சரிவர விசாரிக்கவில்லை என்றாலும், நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சார்பு கொட்டகையானது சரிவாக சரிந்து இருந்தது என்றால் சரிதான்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd/.***
District Muncif -Cum- Judicial Magistrate,
Nannilam